DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | CC 20/2024 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | ரஞ்சித்குமார் |
| Father Name | : | ராஜேந்திரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 40 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14.03.2024.

முதல் விசாரணை

1. நான் வெள்ளியம்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் பாலிபேக் கம்பெனி வைத்துள்ளேன். கடந்த 10.2.2024ம் தேதி நான் என் குடும்பத்துடன் வத்தலகுண்டுக்கு சென்று விட்டேன்.கடந்த 13 2 2024ம் தேதி எனது வீட்டிற்கு அருகே குடியிருக்கும் திலகவதி எனக்கு காலை 9 மணி அளவில் போன் செய்து எனது வீட்டின் கதவு உடைந்து இருப்பதாக தெரிவித்தார். நான் உடனே கிளம்பி அன்று மாலையே வெள்ளியம்பாளையம் வந்தடைந்து விட்டேன். நான் வந்து பார்த்தபோது வீட்டின் கேட் உடையாமல் தான் இருந்தது. ஆனால் வீட்டின் பிரதான கதவு உடைக்கப்பட்டு இருந்தது. நான் உள்ளே சென்று பார்த்தபோது வீட்டிலிருந்து துணிகள் எல்லாம் களைத்து போடப்பட்டு இருந்தது. வீட்டின்

மாஸ்டர் பெட்ரூமில் வைக்கப்பட்டிருந்த இரண்டு பீரோவும் உடைக்கப்பட்டு இருந்தது.

2. மேற்படி பீரோவில் இருந்த நகை டப்பாவில் இருந்து அரை சவரன் தோடு இரண்டு செட், 1 பவுன் செயின் ஒன்று, 1 கிராம் ஓம் டாலர் ஒன்று, சுமார் 2 கிராம் எடை கொண்ட காயின் ஒன்று மற்றும் பட்டன் செல்போன் ஒன்று ஆகியவை களவு போயிருந்தது. நான் அன்றைய தினமே மாலை 6 மணி அளவில் ஊத்துக்குளி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரை எனது அண்ணன் குலோத்துங்கன் எழுதினார். நான் அதில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் போலீசார் அன்றைய தினம் வீட்டுக்கு வந்து கைரேகை சேகரித்து வரைபடம் வரைந்து, விவரம் எழுதி சென்றார்கள். பின்னர் கடந்த 5.3.2024 ஆம் தேதி எங்கள் வீட்டில் திருடிய நபர்களை பிடித்து விட்டதாக சொன்னார்கள். நான் அன்றைய தினம் மாலை வேளையில் காவல் நிலையம் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரிகள் இருவரும் நிலையத்தில் இருந்தார்கள். மேலும் போலீசார் எங்களது வீட்டில் களவு போயிருந்த ஓம் டாலர் ஒன்றையும், ஒரு கிராம் தோடு ஒரு ஜோடியையும் கைப்பற்றி இருந்தார்கள். மேலும் போலீசார் எனது வீட்டில் களவு போயிருந்த கீபேட் ஃபோனையும் கைப்பற்றி இருந்தார்கள்.

4. மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்களை பார்த்த பின்பு தான் எனது வீட்டிலிருந்து ஒரு கிராம் தோடும், களவு போயிருந்தது எனக்கு தெரிய வந்தது. நான் அந்த தோடு இருப்பதையே மறந்து விட்டேன். மேலும் எனது வீட்டில் களவு போயிருந்த மீத நகைகளை எதிரிகள் கோவையில் விற்று

முப்பதாயிரம் பெற்றதாக சொன்னார்கள். அதிலிருந்து ரூபாய் 20,000-யை போலீசார் கைப்பற்றி இருந்தார்கள்.

5. எனது வீட்டில் களவு போய் போலீசார் கைப்பற்றிய நகைகள் என்னிடம் காட்டப்படுவது தான். **(மேற்படி நகைகள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. எனது வீட்டில் களவு போனதும் போலீசால் கைப்பற்றப்பட்ட கீபேட் போன் என்னிடம் காட்டப்படுவது தான். **(மேற்படி கீபேட் போன் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** நான் போலீஸ் விசாரணையின் போது மேற்படி களவு போன எனது கீபேட் ஃபோனின் பில்லையும் சமர்ப்பித்து உள்ளேன். அந்த பில் தற்போது என்னிடம் காட்டப்படுவது தான். **(மேற்படி கீபேட் போன் வாங்கப்பட்டதற்கான சுப்ரீம் மொபைல்ஸ்-ன் பில் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | CC 20/2024 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | குலோத்துங்கன் |
| Father Name | : | முத்துசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 50 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14.03.2024.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தாமரை கோவிலில் வசித்து வருகிறேன். நான் பிரின்டிங் கம்பெனியில் மேலாளராக உள்ளேன். அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 13.02.2024-ம் தேதி போலீசார் ரஞ்சித்தின் வீட்டின் வெளியே வைத்து வரைபடம் வரைந்து விவரம் எழுதி கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விவரங்களை படித்துக் காண்பித்தார்கள். **(பார்வை மகஜரில் உள்ள சங்கதிகள் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அதிலுள்ள விவரங்கள் சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. பார்வை மகஜரில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.